# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழக தலைவர் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பின்படி சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்ய கள ஆய்வுக் குழுவினர் கீழ்கண்டவாறு வருகை தருகின்றனர். இதில் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் : எம்.எம்.அப்துல்லா, ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் ஆய்வு செய்கின்றனர்.

| தேதி | கிழமை | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 21.05.2026 | வியாழக்கிழமை | மாதவரம் தொகுதி | ராஜ ராஜேஸ்வரி திருமண மண்டபம் மாதவரம் பேருந்து நிலையம் எதிரில் |
| 22.05.2026 | வெள்ளிக்கிழமை | திருவொற்றியூர் தொகுதி | T.K.P திருமண மண்டபம் |

சட்டமன்ற தொகுதி வாரியாக குறிப்பிடப்பட்ட நாளன்று இரு வேளைகளிலும் இக்கள ஆய்வுக்குழுவினர் வருகை தரும் போது “அந்தந்த தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர்கள், கழக தொகுதி பார்வையாளர்கள், அந்தந்த தொகுதியில் அடங்கிய மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதிக்குட்பட்ட முன்னாள், இன்னால் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட கழக செயலார்களை முதலில் தனிதனியாக அழைத்து பேசி ஆய்வு செய்ய உள்ளனர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.05.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தாம்பரம் மாநகர தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அறிவிப்பு!



தாம்பரம் மாநகர தி.மு.க. செயற்குழுக் கூட்டம், (23.05.2026 சனிக்கிழமை) மாலை 04.30 மணிக்கு, கிழக்கு தாம்பரம், பாரதமாதா தெருவில் உள்ள மூஷிகா மஹாலில் மாநகர கழக அவைத் தலைவர், துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும், மாநகர கழக நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. ஜூன் 03ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை மாநகரம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவது குறித்து.
2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

**எஸ்.ஆர்.ராஜா**
**தாம்பரம் மாநகர கழகச் செயலாளர்**

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின்
முன்னாள் செயலாளர்

**ஆர். டி. சீத்தாபதி** அவர்களின்
**7 ஆம் ஆண்டு நினைவேந்தல்**
**21.05.2026**



**கழகத்தின் கொள்கைக் குன்றாக,**
**தியாகத்தின் மறு உருவமாக,**
**உழைப்பில் ஒய்வறியாத் தேனீயாக**
**கழகப் பணியாற்றியவர்**
**ஆர். டி. சீத்தாபதி அவர்கள்**


என்றும் உங்கள் வழியில்

**R.D.S.R. பிரபாகரன் R.D.S.R. அன்பழகன் D. மாறன்**

## 140 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர்

# சைதை இரா.லோகநாதன் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## காக்கும் கரங்கள் கருணை இல்லத்தில் உணவு வழங்கல்!



சென்னை, மே 21 -

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினர் சைதை இரா.லோகநாதன் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி இன்று (21.5.2026 - வியாழக்கிழமை) நடைபெறுகிறது.

சைதை இரா.லோகநாதன் இளமை பருவத்திலிருந்து கழகத்தில் ஈடுபாடு கொண்டு சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும், பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று தளபதி அவர்களின் நன்மதிப்பை பெற்றும், தளபதி அவர்கள் மேயராக இருந்த பொழுது பல்வேறு பணிகளை செய்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குனராகவும், மாந்தோப்பு ஆண்கள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சைதை இரா.லோகநாதனின் 11 ஆம் ஆண்டு நினைவு நாளில் காக்கும் கரங்கள் முதியோர் இல்லம் ரெயின்போ பார்டர் ரோடு, மேற்கு மாம்பலம், கருணை இல்ல மன வளர்ச்சிக்குன்றிய குழந்தைகள், மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள கருணை இல்லத்தில் பால், பிஸ்கட், கிரீம் காலை உணவும், காசி விஸ்வ நாதர் கோவிலில் மதியம் அன்னதானமும் அஜிஸ் நகர் அன்னை முதியோர் இல்லத்தில் பகல் 12 மணிக்கு உணவும்எல்.பி.செல்வம், லயன்ஸ் கிளப் லோ.ஜெயராமன் ஆகியோரின் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கப் படுகிறது.

இதில் வட்டக் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள், அன்னாரது குடும்பத்தினர் கலந்து கொள்கின்றனர்.

# செஞ்சி மஸ்தான் செஞ்சியில் வாக்காளர்களுக்கு நன்றி!

செஞ்சி, மே 21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில்வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார் தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வாக்களித்த வாக்காளர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு, ஒன்றிய துணை செயலாளர் செல்வ மணி, மாவட்ட பிரதிநிதி குணசேகரன், ஒன்றிய கவுன்சிலர் ரவிச்சந்திரன், சிங்காரம் ஊராட்சி நிர்வாகிகள் முருகேசன், மணிவண்ணன், மாதேஸ்வரன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாண்டியன், அன்பு, செழியன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பத்திரிகையாளர் மீது கொடூரத் தாக்குதல்

# தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் கண்டனம்!

## யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் கண்டன அறிக்கை!

திருவாரூர்,மே21-

தமிழ்நாட்டின் முதல்வராக ஜோசப்விஜய் பதவி யேற்று சில நாட்களுக்குள்ளாகவே, பத்திரிகையாளர் மீது நள்ளிரவில் நடைபெற்றிருக்கும் கொடூரதாக்குதல் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஜனநாயகத்தின் ஒரு தூணாக விளங்கும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவ தமிழவன் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாநில தலைவர் மு.சிவ தமிழவன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது,


திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் என்பவரை, நள்ளிரவில் ரவுடி கும்பலை சேர்ந்த மூவர் வீடுபுகுந்து தாக்குதல் நடத்தி இருப்பது கண்டனத்திற்குறியது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட செய்தியாளர் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உயிருக்கு போராடும் வகையில் தாக்கி காயப்படுத்திய ரவுடி கும்பலை கைது செய்ய கடும் நடவடிக்கை எடுக்க தமிழக முதலைமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் திருவாரூர் மாவட்ட காவல்துறைக்கு உத்தரவிடவேண்டும் , சிகிச்சையில் இருக்கும் செய்தியாளருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் . மேலும் பத்திரிகை மற்றும் ஊடக துறையினர் வரும் காலங்களில் அச்சமின்றி பணியாற்றிட அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக சட்டப்படி மேற்கொள்ள வேண்டும். இந்த கொடூர தாக்குதலுக்கு உரிய நியாயம் கிடைக்க தவறும்பட்சத்தில் எங்கள் யூனியன் சார்பில் போராட்டங்கள் நடத்தவும் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர் யூனியன் மாநில தலைவர் மு.சிவதமிழவன் தமது அறிக்கையில் கூறி இருக்கிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. நெடுஞ்செழியன்
### மே 21 (2001)



சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.

“கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**